**Sub Court, Eraniel**

**E.A.10/2024**
**in**
**E.P.30/2022**
**in**
**O.S. No. 90 /2020**

Date: 25.04.2025.

ம.சா.1 - திரு. சந்திர ராஜகிருஷ்ணன்

சாட்சி சத்தியபிரமாணத்தின் பேரில் விசாரிக்கப்பட்டார்.

1ம் எதிர்மனுதாரர் குறுக்கு விசாரணை

ராமசந்திரனை எனக்கு 1997 முதல் தெரியும். நானும், எனது அம்மா நாடாச்சி தங்கமும் காசோலைமூலம் ராமசந்திரனிடம் ரூ.60,000/- கடன் வாங்கியிருந்தோம். பின்னிட்டு எனது அம்மா கடன் வாங்கியிருந்தார் என்கிறார். அவ்வாறு நான் கூறுவது சரியல்ல என்றாலும், ரூ.2,50000/- காசோலைமூலம் எனது தாயார் ராமசந்திரனிடம் கடன் வாங்கியிருந்தார் என்றால், சரியல்ல. அந்த காசோலையை வைத்து ராமசந்திரன் நாகர்கோவில் விரைவு நீதிமன்றத்தில் STC NO.195/2016 என்று வழக்கு தாக்கல் செய்தார் என்றால், சரிதான். அந்த வழக்கு நடந்து கொண்டிருக்கும்போது மொத்த தொகையில் ரூ.30,000/- வரவு வைத்து எனது தாயார் திருப்பி கொடுத்தார் என்றால், சரிதான். மீதி தொகை செலுத்துவதற்கு எனது தாயார் வாய்தா வாங்கி கொண்டிருந்தார் என்றால், சரிதான். அதே நேரத்தில், ராமசந்திரன் நாகர்கோவில் சார்பு நீதிமன்றத்தில் ஒரு உரிமையியல் வழக்கு அ.வ.எண்.94/2020 தாக்கல் செய்தார் என்றால் அதுவிபரம் எனக்கு தெரியாது. அந்த வழக்கு அனுமதிக்கப்பட்ட விபரம் எனது தாயாருக்கு தெரியும் என்றால், சரியல்ல. நாங்கள் 3 சகோதரர்கள். நானும் , ராதாகிருஷ்ணனும் ITI படித்திருக்கிறோம், மற்ற சகோதரர் ராமகிருஷ்ணன் B.pharm படித்திருக்கிறார். நாங்கள் அனைவரும் ஒரே வீட்டில் தான் இருந்தோம் என்றால், சரியல்ல, நான் வேறு வீட்டில் என் மனைவி குடும்பத்துடன் ஆசாரிபள்ளத்தில் குடியிருந்தேன். எனது தாயாரும் மற்ற சகோதரர்களும் குருகுலம் சாலையில் உள்ள வீட்டில் வசித்து வந்தார்கள். அந்த காலகட்டத்தில் எனது சகோதரர் ராதாகிருஷ்ணன் இறந்துபோனார் என்றால், ராதாகிருஷ்ணன் என்வீட்டில்

வைத்து இறந்தார். அவர் இறந்த தேதி 29.05.2023. எனது சகோதரர் ராதாகிருஷ்ணனுக்கு எனது தாயார் 2021ல் சொத்தை எழுதிக்கொடுத்தார். எனக்கும் மற்ற சகோதரர்களுக்கும் வேறு வேறு சொத்துகள் எழுதிக்கொடுத்தார் என்றால், சரிதான். ராமகிருஷ்ணனுக்கும், ராதாகிருஷ்ணனுக்கும் திருமணம் ஆகவில்லை என்றால், சரிதான். நீதிமன்ற அழைப்பாணை வந்தபோது எனது அம்மா மற்றும் சகோதரர்களுக்கு இந்த விபரம் தெரியும் என்றால், எனது தாயார் 2020 ல் முன்பணம் வாங்கிவிட்டு, அதே ஊரில் உள்ள எனது சித்தி வீட்டிற்கு சென்றுவிட்டார். ராமகிருஷ்ணன் மற்றும் ராதாகிருஷ்ணன் என்னுடன் வந்து தங்கிவிட்டார்கள். வழக்கு நடந்த விபரத்தினை எனக்கு யார் கூறினார்கள் என்றால், நீதிமன்றத்திலிருந்து ஏலம் பற்றி நோட்டீஸ் ஒட்ட வந்தபோது பக்கத்து வீட்டுக்காரர் போன் செய்து சொன்னபோது எனக்கு தெரியும். அசல் வழக்கில் ஒருதலை பட்ச தீர்ப்பு வழங்குவதற்கு முன்பு பத்திரிக்கை விளம்பரம் கொடுக்கப்பட்டது என்றால், அது விபரம் எனக்கு தெரியாது. இந்த நிறைவேற்று மனுவிலும் பத்திரிக்கை விளம்பரம் கொடுக்கப்பட்டது என்றால் அதுவிபரம் எனக்கு தெரியாது. குருகுலம் சாலையில் உள்ள வீட்டை, பத்திரம் எழுதிக்கொடுத்து கைமாற்றம் செய்தோம் என்றால், சரிதான். எனது ஒரு சகோதரர் திருமணம் ஆகாமல் இறந்துவிட்ட படியால் அவருடைய சொத்து எனது தாயாரை வந்தடைந்தது என்றால், சரியல்ல. இந்த வழக்கிற்காக உண்மைக்கு புறம்பாக தவறுதலாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும், சகோதரர் ராதாகிருஷ்ணனன் திருமணம் ஆகாமல் இறந்துவிட்ட படியால் அவருடைய சொத்து எனது தாயாரை வந்தடைந்தது என்றாலும், சரியல்ல. வழக்கிற்காக எனது தாயார் சொத்துகளை வாய்மொழியாக எனக்கும், எனது சகோதரர் ராமகிருஷ்ணனுக்கு தந்ததாக நான் உண்மைக்கு புறம்பாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால், சரியல்ல. இந்த நிறைவேற்றுகை மனு பட்டிகை சொத்து 08.12.2023 ல் Attachement செய்யப்பட்டது என்றால், அதுவிபரம் எனக்கு நினைவில் இல்லை. எந்த தேதியில் உள்ள Attachement டை மாற்றுவதற்காக நான் இந்த மனுவை தாக்கல் செய்திருக்கிறேன் என்றால், அதுவிபரம் எனக்கு தெரியவில்லை. பின்னிட்டு தேதி நினைவில் இல்லை என்று சாட்சி கூறுகிறார். இந்த மனுவில் நான் என்ன கோரிக்கை வைத்துள்ளேன் என்றால், எனக்கும் என் சகோரர் ராமகிருஷ்ணனுக்கும் சொத்தில் உரிமையுண்டு என்று கோருகிறேன். வழக்கு பட்டிகை சொத்தை நீதிமன்றம் பற்றுகை செய்த தினத்தன்று, எனது தாயர் நாடாச்சி தங்கத்திற்கு மட்டும் தான் அந்த சொத்து உரிமைப்பட்டது என்றால், சரியல்ல. எனது கோரிக்கை மனுவில் நான் குறிப்பிட்டுள்ள விபரம்

அனைத்தும் உண்மைக்கு புறம்பானவை என்றால், சரியல்ல. ராமசந்திரனக்கு முறைப்படி கடன்வாங்கி தொகையை திருப்பி கொடுக்க கூடாது என்ற உள்நோக்கத்துடன், நான் இந்த மனுவை தாக்கல் செய்டதிருக்கிறேன் என்றால், சரியல்ல.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சி படித்து பார்த்து சரியென ஒப்புக்கொண்டு என் முன்னிலையில் கையெழுத்துச் செய்தார்.

சார்பு நீதிபதி,
இரணியல்.